அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் : 02/2014

எனது இல: EST/5/1/3
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.05.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

<u>பதவியுயர்வின் போதான சம்பள மாற்றம்</u>

அரச அலுவலர் ஒருவர் குறித்த பதவி ஒன்றுக்கு அல்லது பதவி ஒன்றின் குறித்த வகுப்பு ஒன்றிலிருந்து வேறொரு வகுப்புக்குப் பதவியுயர்த்தப்படும் பொழுது தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய சம்பளமானது மாற்றியமைக்கப்படல் வேண்டும். முன்னைய பதவி/ வகுப்பு/ தரத்தின் சம்பளவேற்றத் திகதிக்கு வேறுபாடான திகதி ஒன்றில் பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்களுடன் ஒப்பிடுகையில் முன்னைய பதவி/வகுப்பு/தரத்தின் சம்பளவேற்றத்தினை உழைப்பதன் மூலம் பிந்தியதாக சம்பளவேற்றத் திகதியில் பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்களுக்கு உயர்ந்த சம்பளப் படிமுறை ஒன்றினை வழங்குவதன் காரணமாக சம்பள மாற்றத்தில் ஏற்பட்ட சம்பள முரண்பாட்டினை நீக்குவதற்கு 2013.10.31 ஆம் திகதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதற்கிணங்க, சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கான அவசியமான அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகளானவை மேற்படி பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டவாறு முரண்பாடுகளுக்கு உட்படுகின்ற அலுவலர்கள் தொடர்பில் பின்வரும் விபரங்களுடன் தாபனப் பணிப்பாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

i. பதவியுயர்வுக்கு முன்னராக அலுவலர் வகித்த பதவி மற்றும் வகுப்பு / தரம்.
ii. பதவியுயர்வுக்கு முன்னராக அலுவலருக்கு உரித்தாக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டம் மற்றும் சம்பளப் படிமுறைகள்.
iii. பதவியுயர்வுக்கு முன்னரான சம்பள ஏற்றத்திகதி.
iv. பதவியுயர்த்தப்பட்ட திகதி
v. அலுவலர் பதவியுயர்த்தப்பட்ட பதவி மற்றும் வகுப்பு / தரம்.
vi. பதவியுயர்வுடன் தொடர்புபட்ட சம்பள மாற்றம்
vii. அலுவலரின் சம்பள முரண்பாட்டின் இருப்பினை மெய்ப்பிக்கும் பொருட்டு எவ் அலுவலருடன் ஒப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றதோ அவ் அலுவலர் தொடர்பில் மேற்படி i இலிருந்து vi வரையான விபரங்கள்

03. பதவியுயர்த்தப்பட்ட திகதி வரை உரிய அலுவலர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சகல சம்பள மாற்றங்களும் துல்லியமானவை என்னும் கருத்தில் உரிய அதிகாரியின் சான்றிதழுடன் அத்தகைய சம்பள முரண்பாடுகளின் நீக்கத்திற்கான கோரிக்கைகள் தாபனப் பணிப்பாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு